Registered as a Newspaper

இன்றுமுதல்
குதூகல ஆரம்பம்
இன்றைய சூழ்நிலையில்
உங்களுக்கு
பாதுகாப்பான இடத்தில்
எமது சேவை
ஆரம்பிக்கப்படுகிறது.
ELECTRONIC
SERVICE CENTRE
3ஆம் கட்டை
மருத்திரித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை:
ரூ. 1-25

இன்றுமுதல்
குதூகல ஆரம்பம்
இன்றைய சூழ்நிலையில்
உங்களுக்கு
பாதுகாப்பான இடத்தில்
எமது சேவை
ஆரம்பிக்கப்படுகிறது
ELECTRONIC
SERVICE CENTRE
3ஆம் கட்டை
மருத்திரித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஸூ சித்திரை மீ 18 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1407 றம்ழான் பிறை 02 (01-05-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 132

சுதந்திர தமிழீழ தனி அரசுதான் எமது பிரச்சினைக்கு ஒரே தீர்வு!

மலாலி, காங்கேசனில் மேலும் படை குவிப்பு

காங்கேசன்துறை, மே 1
காங்கேசன் துறைமுகத்துக்கு கடந்த புதன் கிழமை வந்து சேர்ந்த இரண்டு கப்பல்களில் இருந்து ஏராளமான படையினர் துறைமுகத்தில் இறக்கப்பட்டு ஹார்பர் வியூ ஹோட்டல் முகாமுக்குச் சென்றனர்.

அங்கிருந்து காலைமுதல் மாலை வரை ஹெலிக்கொப்டர் மூலமாக படையினர் பலாலி முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

கப்பலில் வந்த பொருள்களும் பலத்த காவலின் மத்தியில் இறக்கப்பட்டு ஹோட்டல் முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இதேவேளை செய்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்
01-05-1987
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:-
5-57 முதல் 7-57 வரை
ராகுகாலம்:-
10-27முதல் 11-57வரை
இவை பகலுக்கும்
இரவுக்கும் பொருந்தும்
மே தினம்
சதுர்த்தி விரதம்

சிப்பாய் வீட்டில் வெடித்த கிரனேட்

கொழும்பு மே 1
பலாலி இராணுவ முகாமில் இருந்து விடுமுறையில் வீடு சென்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் பதேகம என்னும் இடத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அச்சிப்பாயின் வீட்டுக்கு அருகே கிரனேட் ஒன்று வெடித்தது.

அதைத் தொடர்ந்தே இச் சிப்பாய் கைது செய்யப்பட்டார்,

அவர் கொண்டு வந்த கிரனேட்டே வெடித்தது என்று சொல்லப்பட்டது

இந்த சிப்பாய் பலாலி முகாமில் இருந்து கிரனேட்கள் பலவற்றைக் கொண்டு வந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. (இ-எ)

உயிர், உடல், ஆன்மாவை அர்ப்பணித்துப் போராடுவோம்

புலிகள் தலைவர் பிரபா அறைகூவல்

யாழ்ப்பாணம், மே 1
சுதந்திர தமிழீழ தனி அரசுதான் எமது பிரச்சினைக்கு ஒரே தீர்வு. இந்த தனி அரசை அமைக்க நாம் எமது உயிர், உடல், ஆன்மாவை அர்ப்பணித்துப் போராடுவோம். இது எமது மே தினப் பிரகடனமாக அமையட்டும்.

மே தினத்தை முன்விட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு வேலுப்பிள்ளை பிரபாகரன் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு அறைகூவல் விடுக்கப்பட்டிருக்கிறது

அறிக்கை விவரம் வருமாறு:-

இன்று உலகில் மிகவும் அநாகரிகமான, மிருகத்தனமான, அடக்குமுறைக்கு ஆளாகி உள்ள மக்கள் சமூகம் என்றால் அது தமிழீழ மக்கள்தான். உலகில் எங்குமே நடைபெறாத கொடுமைகள் தமிழீழ மண்ணில் நாளாந்தம் நடைபெறுகின்றன.

இன ரீதியாக எம்மை ஒழித்துக் கட்டுவதைவிட அவனுக்கு வேறு இலட்சியம் எதுவும் இல்லை. எம்மை இந்நாட்டுப் பிரஜைகளாகவோ அல்லது சாதாரண மனிதப் பிறவிகளாகவோ சிங்கள அரசு கருதவில்லை. எம்மை ஏதோ அன்னியர்களாக அடிமைகளாக வாழத் தகுதியற்ற பிராணிகளாகவே இந்த அரசு கருதுகின்றது.

பொருளாதாரத்தடை, மீன் பிடித்தடை, எண்ணெய்த் தடை, தொலைபேசித் தடை இப்படியாக அத்தியாவசியமான எல்லாவற்றிற்கும் தடைகளை விதித்து எமது சமூக பொருளாதார வாழ்வை எமது நாளாந்த ஜீவாதார வாழ்வை சிதைக்க முயல்கின்றது இந்த அரசு

அதர்ம யுத்தம்

அத்துடன் மட்டுமே நின்றுவிடாது, ஆயுதப் படைகளை ஏவிவிட்டு அப்பாவி மக்களை அழித்தொழிக்கும் ஓர் அதர்மமான யுத்தத்தையும் எம் மீது தொடுத்திருக்கின்றது இந்த யுத்தமானது, அப்பாவித் தமிழர் மீது தொடுக்கப்பட்ட யுத்தம் நிராயுதபாணிகளாக நிற்கும் மக்களைச் சுட்டுக் கொல்வது, வெட்டிக் கொல்வது போன்ற இராணுவ வெறியாட்டங்கள் ஒரு புறமிருக்க விமானக் குண்டுவீச்சு, பீரங்கிக் குண்டு வீச்சு மூலம் தமிழீழத்தை ரணகளமாக்கி வருகின்றது அரச பயங்கரவாத ஓநாய்

தமிழீழ மக்கள் மீது

(4 ஆம் பக்கம் பார்க்க)

பிரபாகரன்

மேதின ஊர்வலங்கள்

யாழ்ப்பாணம், மே 1
மேதின ஊர்வலங்கள் கூட்டங்கள் இன்று குடாநாட்டின் பல பகுதிகளிலும் நடைபெறுகின்றன.

புலிகள்

புலிகளின் ஏற்பாட்டில் நடைபெறும் மேதின ஊர்வலம் உரும்பராய் சிவகுமாரன் சிலையடியில் இருந்து காலை ஆரம்பமாகி நல்லூர் கந்தசுவாமி கோவிலில் முடிவடையும்

அங்கு விடுதலைப் புலிகளின் மேதினக் கூட்டம் நடைபெறும்.

ஈழவர் முன்னணி

ஈழவர் முன்னணியின் மேதின ஊர்வலம் இன்று காலை 9 மணிக்கு திணுவில் சந்தியில் ஆரம்பித்து சுன்னாகம் பொதுச் சந்தை மைதானத்தில் முடிவடையும் அங்கு மேதினக் கூட்டம் நடை

(4ஆம் பக்கம் பார்க்க)

விமானத் தாக்குதல்கள் மீண்டும் தொடங்கலாம்

லலித் அறிவிப்பு

கொழும்பு, மே. 1
தமிழர் பகுதிகளில் தீவிரவாதிகளுக்கு எதிராக விமானத் தாக்குதல்கள் மீண்டும் ஆரம்பிக்கும் சாத்தியம்இருப்பதாகத் தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி அறிவித்திருக்கிறார்.

கடந்த புதன் கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார்.

அரசு இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவே விரும்புகின்றது ஆனால், இதில் தமிழ்த் தீவிரவாதிகள் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

தமிழ் நாடு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் இதுவரை காலமும் தமிழ்த் தீவிரவாதிகளுக்கு மறைமுகமாக உதவி அளித்து வந்தார். இப்போது பகிரங்கமாக உதவ முன்வந்திருக்கின்றார்.

பெரிய நாடு சிறிய நாட்டை மிரட்டும் செயல்தான் இப்போது நடத்துகின்றது

இனப் பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் அமைதித் தீர்வு ஒன்றைக் காணும் வாய்ப்பு தற்போது காணப்படவில்லை என்பதே எனது அபிப்பிராயம்.

யாழ்க் குடாநாடு

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஈழத் தமிழ் ஆதரவாளரை பிரிட்டனிலிருந்து வெளியேற்றத் தடை!

லண்டன், ஏப். 30
பிரிட்டன் தேவாலயம் ஒன்றில் தஞ்சம் புகுந்திருக்கும் சிங்களவரான ஜோர்ஜ் மெண்டிஸை பிரிட்டனை விட்டு வெளியேறக்கூடாது என லண்டன் நீதிமன்றம் ஒன்று நேற்று உத்தரவிட்டிருக்கிறது.

ஈழத் தமிழருக்கு ஆதரவான ஜோர்ஜ் மெண்டிஸை பிரிட்டனை விட்டு இலங்கைக்கு நாடுகடத்த பிரிட்டிஷ் குடிவரவு அதிகாரிகள் தீர்மானித்திருந்தனர்.

ஜோர்ஜ் மெண்டிஸை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும்படியும் அவர் துன்புறுத்தலுக்குஆளாக மாட்டார் என்றும் இலங்கைத் தூதரகம் அறிவித்திருந்தது.

ஆனால் இலங்கையின் அண்மைக்காலச் சம்பவங்கள் சந்தேக நிலையைத் தோற்றுவித்திருப்பதால் அவரை பிரிட்டனைவிட்டு வெளியேற்றக்கூடாது என நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. (உ)

யாழ். ஆஸ்பத்திரியை இடம்மாற்ற யோசனை

அரசு பரிசீலனை செய்கிறதாம்

கொழும்பு, மே 1
யாழ் போதனா ஆஸ்பத்திரியை வேறு இடத்துக்கு இடமாற்றம் செய்வது குறித்து அரசு பரிசீலனை செய்கிறதாம்.

-இப்படி கொழும்பு ஆங்கில நாளிதழ் 'டெய்லிநியூஸ்' நேற்று செய்தி வெளியிட்டது.

இக் குடாநாட்டில் உள்ள ஆரம்ப வைத்தியசாலைகளுக்கு நோயாளிகளை இடமாற்றஞ் செய்வது -

அல்லது அயல் மாவட்டங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு இடமாற்றம் செய்வது ஆகியன குறித்து பேச்சுக்கள் நடந்து வருகின்றன.

இப்படி அரச வட்டாரங்கள் தெரிவித்தன என்று அப் பத்திரிகைச் செய்தி தெரிவித்தது.

இதேவேளை யாழ் போதனா ஆஸ்பத்திரியில் உள்ள சில வசதிகளை வேறு இடங்களுக்கு மாற்றும் சாத்தியம் குறித்து போதனா ஆஸ்பத்திரிகள் அமைச்சு பரிசீலனை செய்து வருகின்றது என அமைச்சர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஈழத் தமிழருக்கு நிவாரணம்:

இந்திய அரசிடம் இலங்கை ஆட்சேபம்

புதுடில்லி, மே 1
இலங்கைத் தமிழருக்கு உதவ 8 கோடி ரூபாவை தமிழ்நாடு முதலமைச்சர் எம் ஜி இராமச்சந்திரன் ஒதுக்கியிருப்பது குறித்து இந்திய அரசிடம் இலங்கை அரசு கடும் ஆட்சேபனையைத் தெரிவித்திருக்கிறது.

புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதர் பெர்னாட் திலகரத்தின நேற்று இந்திய வெளியுறவுச் செயலாளர் கே.பி எஸ் மேனனை அவரது அலுவலகத்தில் சந்தித்து இலங்கை அரசின் ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொண்டார்.

தமிழ்நாடு அரசின் முடிவு, இலங்கையின் இறைமையில் தலையிடுவதாக அமைந்து உள்ளது

-இப்படி இலங்கைத் தூதர் சமர்ப்பித்த கண்டனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

தடையை மீறி மே தினக் கூட்டங்களை எதிரணிகள் நடத்தும்

கொழும்பு, மே 1
அரசுத் தடையை மீறி மே தினக் கூட்டத்தை நடத்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிமுடிவு செய்து உள்ளது.

ஏனைய எதிரணிக் கட்சிகளும் மே தினக் கூட்டங்களை நடத்த உள்ளன கூட்டங்கள் எங்கே நடத்தப்படும் என்பது இரகசியமாக வைக்கப்பட்டு உள்ளது.

தடையை மீறி நடத்தப்படும் மே தினக் கூட்டங்கள், ஊர்வலங்களை பொலிஸார் தடுப்பர் -இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு மாநகரில் பாதுகாப்புப் படைகளின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. (உ-எ)

இந்திரா கொலை முயற்சி:

கருணாநிதி விடுதலை

கோபால்சாமி, ரகுமான்கான் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு

சென்னை, ஏப் 1
இந்திரா காந்தியைக் கொலை செய்ய முயற்சித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி, பொதுச் செயலாளர் அன்பழகன், பொருளாளர் சாதிக் பாட்சா, தற்போதைய அ. தி. மு. க அமைச்சர் [illegible] சண்முகம் உட்பட 63 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை என்று கூறி சென்னை நீதிபதி மருதமுத்து விடுதலைசெய்தார்.

தி மு க. எம் பி, வை கோபால்சாமி, தி மு க எம். எல். ஏ க்களான பொன். முத்துராமலிங்கம், ரகுமான்கான் உட்பட 55 பேர் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளதாக நீதிபதி தீர்ப்பளித்தார்.

1977இல் இந்திரா காங்கிரஸ் தலைவரான இந்திரா காந்தி தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்த போது இச் சம்பவம் இடம்பெற்றது (உ-எ)

முச்சந்தி முனி



கோட்டை முகாமை எடுக்கிறதுக்குப் பதிலாய் ஆஸ்பத்திரியை எடுக்கப் போகினமாம்! காலுக்குத் தோதாய் சப்பாத்துப்போடாமல், சப்பாத்துக்குத் தோதாய் காலை வெட்டுகிற முனைதானே உவைக்கு...!

கோப்பாயில் ஷெல் தாக்கி குழந்தை உடல்சிதறி பலி

தாய், தந்தை, சகோதரி காயம்

யாழ்ப்பாணம், மே 1
நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து வியாழக்கிழமை நள்ளிரவு திடீர் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஷெல் தாக்குதலில் சிக்கி பெண் குழந்தை ஒன்று உயிரிழந்தது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் காயமடைந்தனர்.

இந்தத் திடீர் தாக்குதல்களினால் கோப்பாய் நாவற்குளி அரியாலைப் பகுதி மக்கள் பீதியடைந்து இரவோடிரவாக பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர்

நாவற்குழி முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டு ஒன்று கோப்பாய் கைதடி வீதியில் உள்ள வீடு

(4ஆம் பக்கம் பார்க்க)

இராணுவ நடவடிக்கையை எதிர்ப்பதன் மூலம்

இலங்கைக்கு அநீதி இழைக்கிறது இந்தியா

பிரேமாவின் சாடல் தொடர்கிறது

கொழும்பு, மே. 1
தீவிரவாதிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுப்பதை எதிர்ப்பதன் மூலம் இந்தியா, இலங்கைக்கு அநீதி விளைவிக்கின்றது

பிரதமர் பிரேமதாச கவிகமுவையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவில் பயங்கரவாதம் இடம் பெறுகின்றது. அதை அடக்க இந்திய அரசு இராணுவ நடவடிக்கை எடுக்கின்றது இதை இலங்கை கண்டிக்கவில்லை. அதன் உள்நாட்டு விவகாரத்தில் இலங்கை தலையிடவும் இல்லை.

ஆனால் இந்திய அரசோ தமிழ்த் தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளித்துள்ளது; தமிழ் நாடு மாநில அரசோ உணவு, உடை, பணம் ஆகியவற்றையும் வழங்கப்போகிறது.

தீவிரவாதிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று நிறைவேற்றிய தீர்மானத்தை எக்காரணம் கொண்டும் அரச நாடாளுமன்றக் குழு விலக்கிக் கொள்ளப்போவது கிடையாது

-இப்படி பிரதமர் பிரேமதாச சொன்னார். (உ-எ)

நகரில் சில பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க முடியாத இக்கட்டான நிலைமை

யாழ்ப்பாணம், மே. 1
நேற்றுமுன்தினம் புதன் கிழமை இரவு நடந்த ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து மின் விநியோகம் துண்டிக்கப்பட்ட சில பகுதிகளுக்கு வேறு வழிகளாலும் மீண்டும் மின் விநியோகம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது

இப்படி யாழ் மாநகர ஆணையாளர் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

ஆணையாளரின் அறிக்கை வருமாறு:

புதன் இரவு நடைபெற்ற ஷெல் தாக்குதலில் பிரதான வீதியைச் சுற்றி உள்ள குறுக்கு வீதிகளில் மின்கம்பிகள் அறுந்துள்ளன,

வியாழன் காலை அப் பகுதிகளுக்கு தற்காலிக மின் விநியோகம் வழங்கப்பட்டது.

ஆனால் பிரதான வீதி 1 ஆம், 2 ஆம் குறுக்கு வீதிகளுக்கு இடையில் பிரதான மின் விநியோகக் கம்பிகள் அறுந்து மற்றைய கம்பிகளுடன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

நவீன யுத்தப் படகுகள் வாங்க அரசு முடிவு

கொழும்பு, மே 1
மேலும் பல விரைவுப் படகுகளை வெளிநாடு ஒன்றில் இருந்து கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இப் படகுகள் நவீன கருவிகள், ராடர் சாதனங்கள், பீரங்கிகள் பொருத்தப்பட்டவையாக இருக்கும்.

கொள்வனவு செய்யப்படுவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. (உ-ஐ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

உதய சங்கற்பம்

தூய்மையே தெய்வத்தன்மை எனப் புகழ் பெற்றது. பக்தியால் தீய எண்ணங்களைக் கொல்லலாம்

— தர்மசக்கரம்.

உதயன்
இல. 15, [illegible] தொலைபேசி: 24808
மின்சார நிலைய வீதி, 23078
யாழ்ப்பாணம் 01-05-1987 த.பெ.இல. 85

இன்றைய மேதினம் எழுச்சி நாளாகட்டும்

இன்று உலகத் தொழிலாளர் தினம். தொழிலாளர்கள் தமது உரிமைகள் பலவற்றை வென்று எடுப்பதற்கு அடியெடுத்துக் கொடுத்த எழுச்சியின் நினைவுநாள். வர்க்க முரண்பாடுகளை நீக்கும் போராட்டங்களுக்கு வித்திட்ட நாள். அகில உலகத் தொழிலாளரின் அடிமைநிலையை நீக்கி, விடுதலை பெற்றுக்கொடுக்க முன்னுதாரணமாக விளங்கிய மே முதல்நாள்.

ஒரு தனிமனிதனை, வர்க்கத்தை, இனத்தை எப்போதுமே அடிமையாக இன்னொரு சாரார் அடக்கி வைத்திருக்க முடியாது. சம்பந்தப்பட்ட மனிதன் அல்லது தொழிலாளி அல்லது வர்க்கம் அல்லது இனம் எப்போதோ ஒருநாள் விடுதலை வேண்டி எழுச்சி கொள்ளும்; வீறுகொண்டு போராடும் அந்த எழுச்சியும், வீறும், வீரமும் வெற்றிதர ஒற்றுமை அவசியம். இதனை மேதினம் புகட்டும் பாடமாகும்

தொழிலாளர்கள் இன, மத, குல பேதமின்றி, ஒரே அணியில் நின்று தமது உரிமைகளுக்காகப் போராடி வெற்றி கொண்ட சம்பவங்கள் உலகத்தில் மிகப் பல.

இலங்கையிலும் சிங்கள தமிழ் தொழிலாளர்கள் சகோதரர்போல ஒரே அணியில் நின்று தமது உரிமைகளுக்காகப் போராடி அவற்றை வென்றெடுத்தது உண்டு.

இன்று அவை எல்லாம் பழம் கதையாய், சரித்திரமாய்ப் போய்விட்டன. இனவாதம் என்னும் அரக்கன் தொழிலாளரிடையே புகுந்து அவர்களைப் பிரித்துவிட்டான்.

அதனால் தமிழ்த்தொழிலாளர்கள், ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் தமக்கெனத் தனிவழித் தொழிற்சங்கங்கள் அமைத்துக் கொண்டனர். தாமே தனித்துத் தமது உரிமைப் போராட்டங்களை நடத்தினர்

தமிழ்த் தொழிலாளரின் இன்றைய நிலை மிகவும் அவலம் நிறைந்ததாகும்.

விவசாயிகள் சமம்செய்ய முடியாது. விமானத் தாக்குதலும், ஷெல் தாக்குதலும், மற்றும் அரசபடைகளின் அடாவடித்தனங்களும் விவசாயிகள் தமது தொழிலை உரிய முறையில் செய்யமுடியாது தடுக்கின்றன. எரிபொருள் தடையால் ஏற்பட்டுள்ள கஷ்டம் வேறு. கஷ்டப்பட்டு உற்பத்தி செய்யும் விளைபொருள்களைச் சந்தைப்படுத்த முடியாத சங்கடம் இன்னொன்று. தமிழ் விவசாயிகளில் பலர் தமது சொந்த இடங்களில் இருந்து குடிபெயர்ந்துவிட்டதால் பட்டினியால் வாடும் நிலையும் உண்டு.

அதேபோல தமிழ் மீனவர்களும் கடல் வலயம் பாதுகாப்பு வலயம் என்பவற்றால் தொழில் இழந்து அவதிப்படுகிறார்கள். உயிரைப் பணயம் வைத்துத் தொழில்செய்ய வேண்டிய அவலம்.

இதேபோல வடக்கு, கிழக்குவாழ் ஏனைய துறைத் தொழிலாளர்கள், வர்த்தக, அரசாங்க ஊழியர்கள் ஆகிய சகல தரப்பினரும் அரசின் கெடுபிடித்தனத்தால் தமது தொழில்களைச் சரிவரச் செய்யமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அரைப்பட்டினி, முழுப்பட்டினி கிடக்கிறார்கள்.

தொழிலாளர்கள் என்று பிரித்துச் சொல்ல வேண்டிய அவசியம் ஏது? தமிழ் மக்கள் எல்லோருமே அரசாங்கத்தின் நெறிகெட்ட ஆட்சியாலும், அராஜகத்தாலும், அடாவடித்தனத்தாலும் அடிமை நிலையில், உயிருக்குப் போராடும் நிலையில், உணவுக்குப் போராடும் நிலையில் வாழ்கிறார்கள்; இல்லை இல்லை மரணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே ஈழம் வாழ் தொழிலாளர்கள் மட்டுமன்றி சகல பொதுமக்களும் தாம் அடக்கப்பட்டிருப்பதை எடுத்துக் காட்ட, மேதினத்தை எழுச்சி நாளாகக் கொண்டு அரசாங்கத்துக்கு எதிரான அமைதிப் போராட்டத்தை நடத்த வேண்டும். அதனைத் தமிழர் தேசிய விடுதலைப் போராட்ட நாளாக நெறிப்படுத்தி அரச அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும்.

தொழிலாளரின் குருதியால் சிவந்த நாள் மே நாள். தமிழர்களும் தமது உரிமைகளுக்காக நாளாந்தம் இரத்தம் சிந்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட நாளாக மே தினத்தைப் பிரகடனப்படுத்தி அன்று அமைதிப் போராட்டம் நடத்துவது மிகப் பொருத்தமாக அமையும்.

தமிழர்கள் அடக்கப்படுகிறார்கள், அழிக்கப்படுகிறார்கள் என்பதை சர்வதேசங்களுக்கு எடுத்துச் சொல்லவும் மே தினத்தை பயன்படுத்தலாம். ஈழத் தமிழரின் போராட்டம் வெற்றி அடைய சர்வதேச அங்கீகாரமும், ஒத்துழைப்பும், உதவியும் மிக அவசியம். அதனை இப்பகுதியில் நாம் முன்னே பல தடவைகள் வலியுறுத்தியது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

அரசாங்கத்தின் இனஒழிப்பும் அராஜகமும் உச்சக்கட்டத்துக்கு வந்துவிட்ட நிலையில்—

உரிமைப் போராட்டம் புதிய பரிமாணம் கண்டுள்ள வேளையில்—

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை அங்கீகரிக்குமாறு உலக நாடுகளை, குறிப்பாக சோஷலிச, மனிதாபிமானம் மிக்க நாடுகளைக் கோரும் தினமாகவும் இன்றைய மே நாளை ஆக்கிக் கொள்ளலாம். அதற்காக தமிழ் மக்கள் அனைவரும் இன்று எழுச்சியுடன் அணிதிரளட்டும்!

அணுசக்தி திட்டங்களை பரஸ்பரம் பார்வையிட

அனுமதிக்கப்பட வேண்டும்

இந்தியாவுக்கு பாக யோசனை

இஸ்லாமாபாத்,ஏப். 30 இந்தியா, பாகிஸ்தானின் அணுசக்தித் திட்டங்களையும் — பாகிஸ்தான், இந்தியாவின் அணுசக்தித் திட்டங்களையும் பரஸ்பரம் பரிசோதனை செய்ய அனுமதிக்கப்படவேண்டும். பாகிஸ்தான் அரசாங்கம் இந்த யோசனையை இந்தியாவுக்குத் தெரிவித்திருக்கிறது

அணுசக்தியை சமாதான நோக்கத்துக்குப் பயன்படுத்துவது என்ற தனது தற்போதைய கொள்கையை மீள்பரிசீலனை செய்யப்போவதாக இந்தியா அறிவித்துள்ளதைத் தொடர்ந்தே, பாகிஸ்தான் இப் புதிய யோசனையைத் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் அணுக்குண்டு தயாரிக்கும் வல்லமையைப் பெற்றுவிட்டதாகக்கூறி இந்தியாவும் அணுகுண்டு தயாரிப்பில் இறங்கலாம் என்ற எண்ணத்தை இந்தியாவின் மீள்பரிசீலனை யோசனை ஏற்படுத்தி இருக்கிறது.

அணுசக்தியை சமாதான நோக்கத்துக்காகவே தானும் பயன்படுத்துவதாக பாகிஸ்தானும் கூறியுள்ளது (இ-எ)

சங்கர ஜயந்தி

சென்னை, ஏப். 30 காலடியில் உள்ள ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் ஸ்ரீ ஆதி சங்கர கீர்த்தி ஸ்தம்ப மண்டபத்தில் ஸ்ரீ சங்கர ஜயந்தி நேற்று புதன்கிழமை முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும். (இ-எ)

எய்ட்ஸ் நோய் தமிழ் நாட்டில் பரவுகிறது

தமிழ்நாட்டில் உளுந்தூர்பேட்டையில் 80 பேர்களுக்கு குறையாமல் எய்ட்ஸ் நோயினால் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

உளுந்தூர்பேட்டை, தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ளது

தமிழ் நாட்டில் இதுவரை 5,486 பேர் எய்ட்ஸ் நோய்ப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். (இ-எ)

வெளி உலகில்

இந்தியா வெற்றிகரமாக ஏவுகணைப் பரிசோதனை

தரையில் இருந்து வானுக்குச் செலுத்தப்படும் ஏவுகணைப் பரிசோதனை ஒன்றை இந்தியா வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

இந்த ஏவுகணை உற்பத்தியில் இந்தியா இன்னும் பதினைந்து ஆண்டுகளில் தன்னிறைவு கண்டுவிடும் என்றும் இந்திய பாதுகாப்பு இணை அமைச்சர் அருண்சிங் அறிவித்திருக்கிறார்

ஏவுகணை வெற்றிகரமாகப் பரிசோதனை செய்யப்பட்டது என்ற தகவலை இணை அமைச்சர் அருண்சிங், நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை வெளியிட்டார்.

பரிசோதனை எங்கே, எப்போது நடத்தப்பட்டது என்ற விபரங்களை இணை அமைச்சர் வெளியிடவில்லை. (இ-எ)

தென் ஆபிரிக்காவில் வேலை நிறுத்தக்காரர் கைது!

கேப்டவுன், ஏப். 30 தென் ஆபிரிக்கப் பொலிஸார் கடந்த புதன்கிழமை வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ரயில்வே ஊழியர்களின் தொழிற்சங்கக் காரியாலயத்தை முற்றுகையிட்டு 11 பேரைக் கைதுசெய்து விசாரணைக்கு எனக்கூறி அழைத்துச்சென்றனர்

அதற்கு முன்னர் தலைமைக் காரியாலயத்தில் வைத்து சுமார் 400 உறுப்பினர்கள் பொலிஸாரினால் விசாரிக்கப்பட்டனர்.

சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் திரு. நாயுடு என்பவர் பொலிஸாரின் நடவடிக்கையை ஆட்சேபித்திருக்கிறார்.

தலைமைக் காரியாலயத்தைச் சுற்றிவளைத்துச் சோதனையிட்டது சட்டவிரோதமான செயல் என்று உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய இருப்பதாகவும் திரு நாயுடு தெரிவித்தார். (இ-எ)

முன்னாள் வீரருக்குப் பரிசு!

புதுடில்லி,ஏப்ரல் 30 இந்தியாவின் முன்னாள் பிரபல கிரிக்கெட் வீரர் விஜய் மெர்ச்சண்டுக்கு தாதா நௌரோஜி விருது வழங்கப்பட்டுள்ளது.

வயது குறைந்தவர்களின் வளர்ச்சிக்காக பாடுபட்டவர் என்பதற்காக இந்த விருது விஜய் மெர்ச்சண்டுக்கு வழங்கப்பட்டது

இந்திய விழிப்புலனற்றோர் சங்கத் தலைவராக பணிபுரியும் திரு. மெர்ச்சண்டுக்கு வயது 85 (உ-எ)

இந்தியா கண்டனம்

புதுடில்லி, ஏப். 30 சாம்பியாவினுள் அத்துமீறிப் பிரவேசித்த 5 பொதுமக்களைத் தென் ஆபிரிக்க அரசுத் துருப்புக்கள் சுட்டுக்கொன்ற செயலை இந்தியா வன்மையாகக் கண்டித்துள்ளது. (உ-எ)

கர்மயோகம் செய்யுங்கள்

"கடமையைச் செய், அதற்கான பலனை எதிர்பாராதே" என்று பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பகவத்கீதையிலே அருளியிருக்கிறார். செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் பிரதிபலன்களை நாம் எதிர்பார்க்கின்றோம். ஆனால் பலன் எதையும் கருதாமல் நற்கருமங்களை

ஞானக்கதிர்

மன நிறைவோடு செய்வதே மேலானதாகும். இதைக் கர்மயோகம் என்பர்

இவையெல்லாம் நமக்கு இயலாத பெரிய விஷயங்கள் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் கர்மயோகமானது நாம் எல்லாம் அனுஷ்டிக்கக்கூடிய ஒன்றுதான். நமக்குரிய கடமைகளை நாம் ஒழுங்காகத்தினமும் நிறைவேற்றுவதே ஒருவகையில் கர்மயோகம் தான்.

நித்திய கருமங்களும், தினசரிப் பிரார்த்தனைகளும், ஆலய வழிபாடுகளும் எமது நாளாந்தக் கடமைகள். நமக்கொரு துன்பம் நேர்ந்த வேளையில் அல்லது மகிழ்ச்சியான சம்பவங்கள் நடைபெறுகிற வேளையில்மாத்திரம் நாம் இறைவனை வழிபாடு செய்வோமானால் அது காமியத்தில் பாற்பட்டது (காரணத்தோடு கூடிய எமது தேவைகளை முன்னிட்டு நடத்தப்பெறும் கர்மாக்கள்)

அப்படியில்லாமல் தினசரியோ அல்லது இயன்ற பொழுதிலெல்லாமோ ஆலயம் சென்று வழிபாடியற்றி வருவோமானால், அது நமது மனச்சாந்தியை வளர்த்து மகிழ்ச்சியைக் கொடுக்கும். நமக்கு எதைச் செய்யவேண்டும்; எப்படிச் செய்யவேண்டும்; எப்போது செய்யவேண்டும் என்பதெல்லாம் ஆண்டவனுக்குத் தெரியும் அதனால் ஆண்டவனிடம் நாம் "எனக்கு அதைக்கொடு, இதைக் கொடு" என்று வேண்டிக் கொள்வது அநாவசியமல்லவா?

"நமக்கு நல்லதைச் செய்; நமக்கு மட்டுமல்லாமல் முழு உலகத்துக்குமே நல்லதைச் செய். தப்பித்தவறி நமக்குத் துன்ப துயரங்கள் ஏற்படுமானால் அவற்றைத் தாங்கிக்கொள்ளும் சக்தியையும் நமக்குக்கொடு" என்று ஆண்டவனிடம் வேண்டிக்கொள்வது எமது பரந்த மனப்பான்மையைக் காட்டுகிறது.

கோப்பாய் சிவம்

ஸ்ரீலங்கா அரசு

தமிழ் மக்கள் ஏற்கும் அரசியல் தீர்வைக் காணவேண்டும்

யாழ்ப்பாணம், மே 1 ஸ்ரீலங்கா அரசு இராணுவத் தீர்வைக் கைவிட்டு தமிழ் மக்கள் ஏற்கக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றைக்காண வேண்டும்.

இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான வட பிராந்திய இயக்கத்தின் செயலாளர் நிர்மலா [illegible] அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்

அரசாங்கம் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்காமல் இராணுவ நடவடிக்கை மூலம் தமிழ் பேசும் மக்களை கொன்று குவித்து வருகிறது.

இதே நேரத்தில் திருகோணமலை, ஜயந்திபுர, கொழும்பு மத்திய பஸ் நிலையச் சம்பவங்கள் மக்களின் உயிர் இழப்புக்கும் சவாலாக அமைந்துள்ளது யார் இதனைச் செய்திருந்தாலும் நாம் அதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-10)

பொய்யாமொழி

குறள்.

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானும் கெடும்

பொருள்:

கடிந்து அறிவுரை கூறும் பெரியாரின் துணை இல்லாத காவலற்ற அரசன், தன்னைக் கெடுக்கும் பகைவர் எவரும் இல்லாவிட்டாலும் கெடுவான்.

சமய சந்திகளில்

வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம், மே 1 மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார்கோயில் வருடாந்த மகோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 7-30 மணிக்கு கொடியேற்ற நிகழ்ச்சியுடன் ஆரம்பமாகும்.

இம்மாதம் 13ஆம் திகதி காலை தேர்த் திருவிழாவும் பிற்பகல் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

இம் மாதம் 14ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும். (இ-எ)

அடைக்கலம் தோட்டத்தில்

வட்டுக்கோட்டை, மே 1 வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமியார்கோவில் வருடாந்த உற்சவம் மே மாதம் 4 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது

13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் அடுத்த புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (உ-161)

சூசையப்பர் திருவிழா

யாழ்ப்பாணம், மே 1 தொழிலாளர் பாதுகாவலரான புனித சூசையப்பர் திருவிழா அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் இன்று நடைபெறுகின்றது

அருட்திரு. [illegible] அடிகள் தலைமையில் திருநாட்பலிப்பூசை காலை இடம்பெறும். (இ-எ)

போராளிகள் விருப்பப்படி

சுயாட்சி வழங்கினால் உள்நாட்டு யுத்தம்!

சிங்கள இயக்கப் பிரமுகர் எச்சரிக்கிறார்

கொழும்பு, மே 1 தமிழ்ப் போராளிகள் கோருவது போல் நாடு சுயாட்சியுள்ள பிராந்தியங்களாகப் பிரிக்கப்படுமானால் உள்நாட்டு யுத்தம் வெடிக்கும்

சிங்கள இயக்கங்களின் சம்மேளனத்தின் பேச்சாளர் டாக்டர் காமினி ஈரியகொல்ல மேற்கண்டவாறு எச்சரித்திருக்கிறார்.

கொழும்பு புறக்கோட்டைக் குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து டாக்டர் ஈரியகொல்ல ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திடம் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

"தமிழ்ப் பயங்கரவாதத்தை நசுக்கும்படி அரசாங்கத்தைக் கோருகின்றோம். அதுவரை பேச்சுவார்த்தைகளை அரசு இடைநிறுத்தி வைக்க வேண்டும்.

சிங்களப் பெரும்பான்மையினர் மீது தமிழ்ப் பயங்கரவாதிகள் இத் தாக்குதலை நடத்துகின்றனர்.

-இப்படி டாக்டர் ஈரியகொல்ல மேலும் தெரிவித்தார். (உ-ஐ-எ)

போராளிகளை ஆயுதங்களைக் கீழேபோடக் கேட்பது

தமிழரை அடக்கப் படையினருக்கு லைசென்ஸ் வழங்குவது போன்றது

திலகர் கூறுகின்றார்

சென்னை, ஏப்30 தமிழ்ப் போராளிகள் ஆயுதங்களைக் கீழே போடவேண்டும் என்று திரு ஜெயவர்த்தனா கோருவது, தமிழ் மக்களை அடக்குவதற்கு இலங்கை அரசுக்கும் அதன் படைகளுக்கும் லைசென்ஸ் வழங்குவதற்கு ஒப்பாகும்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பேச்சாளர் திரு எல். திலகர் இப்படித் தெரிவித்தார்.

தமிழர்களை அடக்கி ஆளும் எண்ணத்துடன் தான் ஜெயவர்த்தனா போராளிகள் ஆயுதங்களை கீழே போடவேண்டும் என்று கோருகின்றார் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இருக்கும் வரை இலங்கை அரசிடம் சரணடையப் போவது இல்லை.

நாமும் சமாதானத்தையே விரும்புகின்றோம் இது வெளிப்படையானது. ஆனால் சமாதானம் கௌரவத்துடன் இருக்க வேண்டும்

அமைதியை உருவாக்க சில நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும்.

சமபலத்துடன், சமமான நிபந்தனைகளுடன் தான் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் பங்கு பற்றவேண்டும்.

தமிழ் மக்களின் ஆதரவு பெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியாது என்பதை, பேச்சுக்களைத் தொடங்கும் முன்னர், இலங்கை அரசுக்கு உணர்த்த வேண்டும்.

அண்மையில் யாழ் குடாநாட்டில் அடைந்த தோல்வியில் இருந்து இலங்கை அரசு பாடம் படித்திருக்கவேண்டும்.

இப்படி திரு. திலகர் தெரிவித்தார். (இ-எ)

தரகர் தொல்லை

சங்கானைச் சந்தையில் தரகர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது

பொருள்களை கூடிய விலைக்கு விற்றுத் தருவதாகக் கூறி விவசாயிகளையும் கொள்முதல் செய்வோரையும் ஏமாற்றி அதிக பணத்தைத் தரகர்கள் சம்பாதித்து வந்தார்களாம். விவசாயிகள் இத்தரகர்களின் தொல்லைகளிலிருந்து தம்மைக் காப்பாற்றுமாறு முறையிட்டனராம். இதனை அடுத்து சங்கானைச் சந்தையில் தரகர் தொழில் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (இ-161

கந்தளாய்ப் படுகொலை:

உயிரிழந்த படையினர் எண்ணிக்கை 66

கொழும்பு, மே 1 பெரிய வெள்ளி அன்று கந்தளாய்க்கு அருகில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தில் படுகாயங்களுக்குள்ளான பன்னிரண்டு படையினரில் விமானப் படையின் உயர் அதிகாரி ஒருவரும் இருக்கின்றார்.

இவர்கள் அனைவரும் தற்சமயம் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச் சம்பவத்தில் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை 66 ஆகத் தற்போது அதிகரித்துள்ளது.

கடற்படை, விமானப் படை, இராணுவம், பொலீஸ் ஆகியவற்றில் பணியாற்றி வந்தவர்களே உயிரிழந்தனர். இப்படி ராய்ட்டர் செய்திஸ்தாபனம் அறிவித்துள்ளது (உ-ஐ-எ)

அன்னையர் முன்னணி மேதினச் செய்தி

யாழ்ப்பாணம், மே 1 உலகெங்குமுள்ள பல கோடி உழைக்கும் மக்களின் உரிமைப்போராட்டத்தின் அடையாள தினமாகிய இன்று எமது சகல விவசாயி, தொழிலாளி மக்களுக்கு அன்னையர் முன்னணி தனது ஆதரவையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

இப்படி அன்னையர் முன்னணி விடுத்த மேதினச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித நேசத்தையும் மனித உரிமைகளையும் நிலைநிறுத்த ஒன்றுபடுமாறு சகல உழைக்கும் மக்களையும் பெண்களையும் அன்னையர் முன்னணி வேண்டுகிறது (இ)

ரம்ழான் சிந்தனை

நோன்பு பொறுமையில் பாதி என்றும், பொறுமை இறை நம்பிக்கையில் பாதி என்றும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

அதை வைத்துப் பார்க்கும்போது நோன்பு இறை நம்பிக்கையின் கால்வாசியாக இருக்கின்றது.

மேலும் அது அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் உள்ள தனிப்பட்ட தொடர்பின் காரணமாகவே (இஸ்லாத்தில்) மற்றத் தூண்களை விட்டும் தனித்து விளங்குகிறது.

மௌலவி,
ஏ. ஆர். எம். நவஸீ

உதயன் மே தினச் சிறப்பிதழ்

உதயன் மே தினச் சிறப்பிதழ்

தமிழ்த் தேசிய போராட்ட நாளாக மே தினத்தை நெறிப்படுத்துவோம்

மலையகத் தொழிலாளரை முன்னுதாரணமாகக் கொள்ளலாம்

முதலாளித்துவம் ஜனனித்து பலநூறு வருடங்கள் கடந்த போதிலும் ஈவிரக்கமற்ற கொடூரமான சுரண்டலுக்கு ஆளான தொழிலாளி வர்க்கம் அன்றாட சீவியத்தை நடத்த 12–16 மணி நேரம் உழைத்து வந்தது.

தனது வருமானத்தைப் பெருக்கவென்றும் தன் வாழ்க்கைக்காகத் தொழிலாளி பாடுபட்டான்

அமெரிக்காவில் வெடித்த போராட்டம்

அக் காலகட்டத்தில் 8 மணி நேர வேலைக்கான கோரிக்கை வலுப் பெறத் தொடங்கியது. அப்போராட்டத்தின் மையமாக அமெரிக்காவின் சிக்காகோ நகரமே காணப்பட்டது.

1866 ஆகஸ்ட் 20ஆம் திகதி பால்டிமோர் என்னுமிடத்தில் 60 தொழிற்சங்கங்கள் ஒன்றுகூடி 'தேசிய தொழிலாளர் ஒன்றியம்' National Labour Union என்னும் அமைப்பை உருவாக்கின.

இந்த அமைப்பு 8 மணி நேர வேலைக் கோரிக்கையைத் தீவிரமாக முன்வைத்தது. பல மாநிலங்கள் உடனே 8 மணிநேர வேலைக்கான சட்டத்தை இயற்றின. எனினும் 1867 இல் பிரதம நீதி மன்றத்தினுல் மேற்படி சட்டமூலம் உயிர் அற்றதாக்கப்பட்டது.

அமெரிக்கத் தொழிலாளரின் நடவடிக்கையால் அச்சம் கொண்ட அமெரிக்க நாடாளுமன்றம் 1868 இல் 8 மணி நேரச் சட்டத்தை இயற்றியது ஆனால் அப்போதைய ஜனாதிபதி ஏ ஆர் தர்சைச் சட்டமூலம் அரசியல் அமைப்புக்கு முரணானது உலகில் உள்ள எந்தவொரு சக்தியும் தன்னை நிர்ப்பந்திக்க முடியாது எனக்கூறி நாடாளுமன்றத் தீர்மானத்தை அலட்சியமாக நிராகரித்தார்.

கொதித்தெழுந்தார்கள் தொழிலாளர்கள் ராணுவம் கட்டவிழ்த்து விடப்பட்டது. கேட்டுப் பயனில்லை நாமாவே பெறவேண்டியது தான் உரிமை என்ற நிலைக்கு வந்த தொழிலாளர் வர்க்கம் எதையும் தாங்கும் வலிமையுடன் 8 மணி நேர வேலையை நடைமுறைப்படுத்துவது எனத் திடசங்கற்பம் பூண்டது

1886 மே 1ம் திகதி அரச அச்சத்துடன் அவதானிக்கத் தொழிலாளர்கள் யுத்த வீரர்கள் போல் தம்மைத் தயார்படுத்தியவாறு வேலைத்தளம் செல்கின்றனர். 8 மணித்தியாலம் வேலை முடிவடைந்ததும் உடன் 11562 தொழிற்சாலைகளைச் சேர்ந்த 6 லட்சம் தொழிலாளர்கள் வெளி நடப்புச் செய்கின்றனர்

இயந்திரங்களின் இரைச்சல் ஓய்கின்றது போராளிகளின் கோஷங்கள் வானைப் பிளக்கின்றன அரசு ஆட்டம் கண்டது முதல் நாள் போராட்டமே 1,86,000 தொழிலாளருக்கு வெற்றியைக் கொடுத்தது

மரண தண்டனை

அடுத்து வரும் தினங்கள் சிவந்த தினங்கள் சிந்திய குருதியால் பூமி சிவக்கின்றது போராட்டத்தை முன்னெடுத்த தலைவர்கள் 8 பேரும் நீதிமன்றத்தில். அவர்கள் செய்த குற்றம் யாது? தொழிலாளர்களுக்கு தலைமை தாங்கியமைக்காக 7 பேருக்கு மரண தண்டனை ஒருவருக்கு ஆயுள் தண்டனை.

தொழிலாளர்கள் எழுச்சியின் வேகத்தை கண்ட முதலாளித்துவ அரச கோபத்தைத் தணிக்க மேலும் இரு தலைவரின் மரணதண்டனை ஆயுள் தண்டனையாக்கப்பட்டது

தலைவர்களின் மரணம் தொழிலாளரை வெஞ்சினம் கொள்ள வைத்தது ஆர்த்தெழுந்தார்கள் தொழிலாளர்கள் அவர்கள் மார்பில் ஏற்ற துப்பாக்கிக் குண்டுகள் தான் எத்தனை? ஆனாலும் பயந்துவிடவில்லை ஒடுங்கி விடவில்லை. உரிமைகளை பெற்றுர்கள் அவர்கள் இன்று அனுபவிக்கும் உரிமைகள் வழங்கப் பட்டவையல்ல அரும்பாடு பட்டுப் போராடிப் பெற்றவையே

எமது எழுச்சியே வெற்றியை நிர்ணயிக்கும். எமது உரிமைகள் உடைமைகள் தயவால் கிடைப்பவையல்ல அவையாவும் செறிந்த வீரத்துடன் போராட்டத்தில் வென்றெடுக்கப்பட வேண்டியவை

மலையகத் தமிழர்

இன்றைய தினத்தில் ஏறக்குறைய 164 ஆண்டுகளாக சுரண்டலுக்குட்பட்டுவரும் மலையகத் தோட்டத் தொழிலாளரை நினைவுகூருதல் சிறந்ததாகும்

மனித அடிப்படை உரிமைகளுக்கு முரணான பிரஜா உரிமைச் சட்டம் மலையகத் தோட்டத் தொழிலாளரின் அடிப்படை, அரசியல், பொருளாதாரம் உட்பட அனைத்து உரிமைகளையும் பறித்து ஆண்டாண்டு காலமாக இலங்கையின் பொருளாதாரத்தை சுமந்துவரும் அத்தோட்டத் தொழிலாளரின் உரிமையை அன்று அந்நியர் தொடக்கம் இன்று இலங்கையர் வரை அனைவரும் பறித்துக் கொண்டே வருகின்றனர்.

குருதி வியர்வை சிந்த உழைக்கின்றுர் இறக்கும்போது அவனது உடலும் எமக்கு வளமாகின்றது

மாறி மாறி இரு ஆர

(4 ஆம் பக்கம் பார்க்க)

★ றெபேட்சன் ★

மேதினம் வந்ததுவே!

ஓங்கிடு செங் கொடி தாங்கிடு கரங்களில்
தேங்கிடு வியர்வை திரு வோங்கிடவே பார்
தாங்கிடு முதுகெலும் பாகிடு பாட்டாளி
ஓங்கிட மேதினம் வந்ததுவே
ஊழல்கள் ஒழிப்பதில் பேரணி கொள்பவன்
ஞாலத்து வித்தகன் அவன் குரலே.
சீரொடு செல்வங்கள் மேதினி சேர்ப்பது
பேரொளிப் பெருமகன் அவன் கரமே!

—திருமதி துரையம்மா நடேசரத்தினம்

மே தினமே வந்திடுக!

முதலாளித்துவம் ஜனித்த
சுரண்டல் அரக்கனுக் கெதிராக
முதன் முதல் திரண்ட
வர்க்க எழுச்சித் தினம்
மேதினம் அல்லவா?

1886 இல் பால்டிமோர் நகரில்
கனிந்த தலைமையில்
ஊற்றிட்ட வர்க்க உணர்வு
சிக்காகோ வரை கரைபுரண்டு
நாடு தழுவிய நிலையில்......

எட்டு மணி நேர வேலை!
எட்டு மணி நேர ஓய்வு!
எட்டுமணி நேர பொழுது போக்கு!
எழுச்சிக் கோசம்......

ஏழு லட்சத்துக்கும் அதிகமான
பல்வேறு நகரத் தொழிலாளர்கள்
செங் கொடி ஏந்தி
வெற்றி முரசு முழங்கினர்.

ஆம் அன்றுதான்
1886 ஆம் ஆண்டு
மே முதல் திகதி!

-பொன். பொன்ராசா-

மேதின வேண்டுகோள்

தொழிலாளர்கள் நாங்கள்
வாழ்வதற்கே
போராடுகின்றோம்.
இழந்தஎம்இறைமை
உழைப்பவர் உரிமை
இவையே நம் தேவை

— கந்தகக்கவி —

பொன்னான மே தினமே!

செங்குருதி குளித்து நின்ற
சிக்காகோ வீதிகளில்
செக்காக உழைத்திட்ட
தொழிலாளத் தோழர்கள்
செத்துக்கிடந்தார்கள்
எதற்காக...?

உழைப்புக்கு ஏற்ற ஊதியம்
எட்டுமணி நேர ஓய்வு
மேலதிக வேலைக்குக் கூலி...
இவைகளைக் கேட்டதிற்கு
அவர்களுக்குக் கிடைத்த பரிசு
அடி... உதை... கொலை...
சிக்காக்கோ வீதி
சிவப்பாய்க் கசிந்தது...
இது மேதினத்தின் வரலாறு...

--கிழக்கினியாள்--

உலகத் தொழிலாளர் தினமாம்
மேதினத்தில் பாட்டாளி மக்கள்
ஒற்றுமையுடன் உயர்வுபெற
எம் நல் வாழ்த்துக்கள்
புத்தகங்கள், சஞ்சிகைகள்
பாடசாலை உபகரணங்கள்
பெற்றிட நாடுங்கள்
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

உழைக்கும் பாட்டாளி வர்க்கம்
உயர்வுற மே தினத்தில்
எம் நல் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.
பிரபல ஓடுகள் விற்பனையாளர்கள்
எம். ரி. சோமசுந்தரம்
அன் சன்ஸ்
M. T. Somasundaram
& Sons
199, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

உலகத் தொழிலாளர்களுக்கு
எமது
புரட்சிகர வாழ்த்துக்கள்
வெளிவாரிப் பட்டப்படிப்புக்கும்
A/L கலை, வர்த்தக
வகுப்புக்கும்
வடமராட்சியின் ஓரே நிறுவனம்
கெயின்ஸ்
நெல்லியடி.

மே தின வாழ்த்துக்கள்!
★ பிரயாணத்திற்குத் தயாராகுங்கள்!
உங்களைப் பாதுகாப்பாகக் கூட்டிச் செல்ல
★ GLORIA TRAVELS ★
● ஆயத்தமாக இருக்கிறது ●
★ Seaman ★ Deck Boy ★ Oiler
★ A. B. Sailor ★ Mess Boy
ஆகிய துறைகளில் பயிற்சி உள்ளவர்கள்
நேரில் தொடர்பு கொள்ளவும்.
★ பிரான்ஸ் ★ ஜேர்மனி ★ இத்தாலி
ஆகிய நாடுகளுக்கு எமது முகவர்
கொழும்பிலிருந்து அழைத்துச் செல்வார்
பாஸ்போட், பொண்ட் (BOND) விசா, ரிக்கட்
ஆகியனவும் செய்து தரப்படும்.
★ GLORIA TRAVELS ★
சின்னத்தம்பி அவெனியூ, மானிப்பாய்,
★ எமக்கு வேறு கிளைகள் கிடையாது (C 20)

உலகத் தொழிலாளர் திருநாளாம்
மே தினமான இன்று
பாட்டாளிகள் நலன்ஓங்க வாழ்த்துகிறோம்!
★ நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன் ★
YOUR FRIENDS IN FINANCE
"ஷப்ரு"
யுனிக்கோ பினன்ஸ் லிமிடெட்
Shabra Unico Finance Limited
COLOMBO — JAFFNA.

மேதின வாழ்த்துக்கள்   சிறந்த முறையில் வீடியோ படம் எடுப்பதற்கு ஓர் புத்தொளி உதயம் அதுவே
★ வீடியோ விஷன் ★
வீடியோ பிரியர்களே! உங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமணம், பிறந்தநாள், பூப்புனித நீராட்டு விழா, பிரியாவிடை போன்ற மங்கல நிகழ்ச்சிகளை வீடியோ படம் எடுத்துநிகழ்ந்தவற்றை நினைவூட்டும் வகையில் கண்டு களிப்புற அழைப்பவர்கள்
✳ 'வீடியோ விஷன்' ✳
மங்கல நாட்கள் மகிழ்ச்சி பெறும் வண்ணம் அதிசிறந்த வீடியோ படம் எடுக்கும் சேவையால் வட இலங்கையில் புகழ் பெற்றவர்கள்.
வீடியோ விஷன் இல: 213, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

உதவி ஆசிரியர்
போட்டிப் பரீட்சைக்கான
வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன

தொடர்பு- நிர்வாகி
"கெயின்ஸ்"
நெல்லியடி
(1248)

உதயன்

01 · 05 1987 வெள்ளிக்கிழமை

கெயின்ஸ்
நெல்லியடி
G. A. Q. 1988
வகுப்புகள் நடைபெறுகின்றன
(1245)

மா, அரிசி போதுமான அளவு கையிருப்பில்

ஆனால் விநியோகிக்க முடியாத நிலைமை

யாழ்ப்பாணம், மே. 1 யாழ் குடாநாட்டு மக்களுக்கு பல மாதங்களுக்குப் போதுமான அளவு மா, அரிசி காங்கேசன்துறை களஞ்சியத்தில் உள்ளது. ஆனால் அவற்றை மக்களுக்கும், ப. நோ. கூ. சங்கங்களுக்கும் விநியோகிக்க முடியாத நிலையில் உணவுத் திணைக்களம் இருந்து வருகிறது.

உணவுத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

இரு மாதங்களுக்குப் போதுமான மாவும், ஏழு மாதங்களுக்குப் போதுமான அரிசியும் காங்கேசன்துறை களஞ்சியத்தில் உள்ளன.

அண்மைக்காலங்களில் காங்கேசன்துறைப் பகுதியில் இடம்பெற்றுவரும் அசம்பாவிதங்களால் இவற்றை களஞ்சியத்தால் எடுத்து விநியோகிக்க முடியாதுள்ளது.

திணைக்கள ஊழியர்கள் தொழிலாளிகள் களஞ்சியத்துக்குச் செல்லப் பயப்படுகிறார்கள்.

கடந்த மார்ச் மாதத்தில் உணவுத்திணைக்களத்தைச் சேர்ந்த இரு தொழிலாளிகள் காங்கேசன்துறையில் இராணுவ துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள். 8 தொழிலாளிகள் காயமடைந்தனர்.

காங்கேசன்துறை களஞ்சியத்தில் இருந்து மாவையும் அரிசியையும் எடுக்க முடியாதிருப்பதால் ப. நோ. கூ. சங்கங்களில் அரிசி, மா என்பன கையிருப்பில் இல்லை.

இச்சங்கங்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கின்றன.

பல சங்கங்களின் லொறிகள் தினமும் தெல்லிப்பளைச் சந்தி வரை வந்து காவல் நின்று திரும்புகின்றன. காங்கேசன்துறையில் அசம்பாவிதங்கள் தினமும் இடம்பெறுவதாலேயே இவை தெல்லிப்பளையுடன் திரும்புகின்றன.

எரிபொருள் தட்டுப்பாடான இந்நேரத்தில் இவ்வாறு தினமும் எரிபொருளை சங்கங்கள் வீணடிக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு அந்த உயர் அதிகாரி தெரிவித்தார். (இ-ள)

★★★★★★★★★
★சின்னஞ் சிறு★
★விளம்பரங்கள்★
★★★★★★★★★

அறிவித்தல்

நாம் புதிய கிளை ஸ்தாபனம் ஒன்றை ஆஸ்பத்திரி வீதியிலுள்ள (Bank of Ceylon) அருகாமையில் ஆரம்பித்துள்ளோம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். கண் வைத்திய நிபுணர்களினால் பரிசோதனை செய்த கண்ணாடிகளைச் சகாயமாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஸ்தாபனம். S. M. Fernando 580, 1 ஆம் மாடி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (1111)

உழைக்கும் வர்க்கம் ஒன்றிணைய திடசங்கற்பம்

ஈழவர் முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம்,மே 1 உழைக்கும் வர்க்கம் அனைத்தும் தமது வர்க்க உறவைப் பிணைக்க இம் மேதினத்தில் திடசங்கற்பம் பூணவேண்டும்.

ஈழவர் முன்னணியினர் விடுத்துள்ள மேதினச் செய்தியில் இப்படிக் கூறப்பட்டுள்ளது.

செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:- இனப்பிரச்சினைத் தீர்வில் இதுவரை தான் காட்டிவந்த இழுத்தடிப்புகள் வெளிப்பட்டுவிடலாம் என்ற காரணத்தாலும் - தென் இலங்கையில் அரசுக்கு எதிரான கோஷங்களும், எதிர்ப்புக்களும் நாளுக்கு நாள் அதிகரித்துவருவதாலும்- தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஸ்ரீலங்கா அரசு பொய்க் காரணங்களைக் கூறி தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை முன்வைக்கும் இந்த மேதினத்தை தடைசெய்துள்ளது.

சகல இடதுசாரி அமைப்புக்களும் ஒன்றிணைந்து இனப்பிரச்சினைத் தீர்வில் தமிழ்பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்து அரசுக்கு எதிராகத் துணிந்திடவேண்டும்.

இவ்வாறு மேதினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது. (இ ள)

தொழிலாளர் - விவசாயிகள்

உரிமைகளை மீட்க போராடுவோம்

யாழ்ப்பாணம், மே 1 தென் இலங்கையிலும் தொழிலாளர், விவசாயிகள் பிரச்சினைகள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. உரிமைகள் பறிக்கப்பட்டு வருகின்றன. இதற்கு எதிராகப் போராடுவோம்.

நவசமசமாஜக் கட்சி, ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம், ஐக்கிய உள்ளூராட்சி ஊழியர் சங்கம், இலங்கை கூட்டுறவு வர்த்தக ஊழியர் சங்கம், அரச மரக் கூட்டுத்தாபன ஊழியர் சங்கம் இணைந்து வெளியிட்ட மேதினச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தென் இலங்கையில் நடந்த குண்டு வெடிப்புக்கு யார் காரணம் என்றே திட்டவட்டமாக தெரியாத சூழ்நிலையிலும், இந்த அரசாங்கம் மேதின ஊர்வலம், பொதுக்கூட்டம் உட்பட சகல கூட்டங்களுக்கும் ஊர்வலங்களுக்கும் தடைவிதித்துள்ளது.

முதலாளித்துவத்தின் கீழ் எந்தக் காலத்திலும் ஒரு நாட்டின் முக்கிய பிரச்சினைகளான வர்க்கப் பிரச்சினையும், தேசிய இனப் பிரச்சினையும் தீர்த்து வைக்கப்பட்டதாக நாம் அறியவில்லை.

இவ்வாறு செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது (இ-ள)

வர்த்தகர் சங்க அறிக்கை

யாழ்ப்பாணம், மே 1 தமிழர் தாயகத்தில் கொண்டாடப்படும் மே தின ஊர்வலத்திலும், கொண்டாட்டங்களிலும் வர்த்தகர்கள் அனைவரும் பங்கு கொண்டு தமது பங்களிப்பையும் செலுத்த வேண்டுமென, வர்த்தகர் சங்கம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் கோரியிருக்கிறது. (உ)

பின்போடப்பட்டது

யாழ்ப்பாணம், மே 1 இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த 'மரணம் வாழ்வின் முடிவல்ல' வீடியோ திரைப்பட வெளியீட்டு விழா 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு பின்போடப்பட்டுள்ளது. (இ-ள)

விமானத்----

(1ம்-பக்கத் தொடர்ச்சி) மீதான குண்டு வீச்சு இடை நிறுத்தப்பட்டுள்ளதே தவிர ரத்துச்செய்யப்படவில்லை

-இப்படி அமைச்சர் அத்துலத்முதலி தெரிவித்தார்- (உ-ள)

கோப்பாய் :..

(1ம்-பக்கத் தொடர்ச்சி) ஒன்றில் விழுந்ததால் பெண் குழந்தை ஒன்று உடல் சிதறிப் பலியானது.

இக்குழந்தையின் தாயும் தகப்பனும் சகோதரி ஒருவரும் இத்தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தம்பிராசா தர்ஷா (வயது 4) என்ற குழந்தையே உடல் சிதறிய நிலையில் பலியானது.

இளைப்பொடி தம்பிராசா (வயது 30) தம்பிராசா வசந்திமாலா (வயது 28), தம்பிராசா தயாசினி தேவி (வயது 8) ஆகியோர் படுகாயமடைந்தனர். (உ-10)

நகரில்---

(1-ஆம்பக்க தொடர்ச்சி) சிக்குப்பட்டுத் தொங்குகின்றது. இந்த இடங்களில் மின் கம்பங்களில் ஏறி வேலை செய்தால் கோட்டைக்குள் இருக்கும் இராணுவ சென்றிகளுக்குத் தெரியவரும்.

இப்போது அவர்கள் சினைப்பரால் சுடுகின்றனர். இதனால் மின் தொழிலாளர்கள் அத்தூண்களுக்கு அருகே செல்லப் பயப்படுகின்றனர். அவர்களை அங்கு போகவும் சொல்ல முடியாதநிலை.

மற்றும் பிரதான வீதியின் மின் கம்பிகள் பழைய ஐக்கிய வியாபாரச் சங்கத்துக்கு முன்னால் ஆரம்பித்து மத்திய கல்லூரிக்கு முன்பாகப் போய் பிரதான வீதி ஊடாக 3 ஆம் குறுக்குத் தெரு சந்திவரைக்கும் செல்கின்றன,

மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு மின்சாரத்தடை ஏற்பட்டுள்ளது. வேறு வழிகளாலும் இப்பகுதிக்கு மின் விநியோகம் செய்ய முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இப்படி ஆணையாளர் தெரிவிக்கிறார். (உ-ள)

விசித்திரம்

என்ன, முரளியார் இண்டைக்கு மே தின ஊர்வலம் கூட்டங்கள் நடக்குது. ஒண்டுக்காகுதல் போகயில்லையே?

ஓ, தனித்தான் போகப் போறீரோ? ஊர்வலங்கள் ஒன்பது மணிக்குத் தொடங்கும் என்டு சொன்னாலும் வழமை போலப் பிந்தும் என்டதும் உனக்குத் தெரிஞ்சிருக்கு!

புறக்கோட்டையில குண்டு வெடிச்ச சாட்டோடை மே தினக் கொண்டாட்டங்களுக்கு அரசாங்கம் தடை போட்டிருக்கு. தென்னிலங்கை இருக்கிற நிலையில், மே தினக் கொண்டாட்டம் நடந்தால் பெரிய அமளி துமளியள் நடக்கும், அரசாங்கத்துக்கு இருக்கிற எதிர்ப்பு வெளியில தெரிய வரும். அதுக்குப் பிறகும் பயங்கரவாதத்தைக் காட்டி அரசியல் நடத்திறது கஷ்டமாயிருக்கும். இதுகள் எல்லாத்தையும் உத்தேசித்துத்தான் வாய்த்தது வசதி என்டு மேதினத்தை ஒத்திப்போட்டு விட்டினம். ஆனால் தடையை மீறிச் சில கட்சிகள் அங்கு மே தினம் கொண்டாடப் போறதாய் செய்தி வந்திருக்கு! என்ன அமர்க்களம் நடக்குமோ தெரியாது!!

ஆனால் இஞ்சை பெரிய அளவில மே தினக் கொண்டாட்டங்கள் நடக்குது. உது தான் காலம் மாறும் கதையும் மாறும் என்டு சொல்லுறவ.

உனக்குச் சில பழைய ஞாபகங்களைச் சொன்னால் ரசிப்பாய் கேட்பாய் என்டு நினைக்கிறேன்.

1966 இல் மேதின ஊர்வலத்தில் இடதுசாரிக் கட்சிகளே தமிழருக்கு எதிரான கோஷங்களைப் போட்டவை. "டட்லிகே படே மசால வடே" "தோசை வடே அப்பிட்ட எப்பா" என்டு பல விதமான துவேஷக் கோஷங்கள். அதுக்குக் காரணம் டட்லி தமிழரசுக் கட்சியைச் சேர்த்து தேசிய அரசாங்கம் அமைத்திருந்தது தான்.

அதுக்கு முன்னுக்கு 1965 சிம்மாசனப் பிரசங்கத்தின் போது யு. என். பி எம். பி திருமதி. ராஜரத்தினத்தைப் பார்த்து பார்லிமெந்தில் "வாங்கோ மீனாட்சி வாக்குப் போட வாங்கோ" என்டு துவேஷம் கிண்டல் செய்தினம்.

1956 இல தொடங்கின இனத் துவேஷம், 30 வருஷத்தில எப்படி தமிழரையும் சிங்களவரையும் இரு துருவங்களாய் மாத்திப் போட்டுது!

அதில தெற்கில உள்ள சகல கட்சிகளுக்கும் பெரும் பங்குண்டு. எல்லாரும் தாங்கள் பதவிக்கு வாறதுக்கு இனத் துவேஷத்தைப் பாவிச்சினம். இப்ப அதுகளின்ரை வினையை அறுக்கினம்.

வினை விதைச்சவன் வினை அறுப்பான், தினை விதைச்சவன் தினை அறுப்பான் என்டதை மறந்து, நாட்டிலை அவலநிலைக்கு தமிழ்ப்போராளிகள் மீது பழி போடுகினம். தென்னிலங்கை அரசியல் வாதிகள் சரியா நடந்திருந்தா இந்த நிலைமை ஏன் வருகுது?

தமிழ்த் தேசிய----

(3ஆம் பக்க தொடர்ச்சி) சியல் கட்சிகள் ஆட்சிக்கு வந்த போதிலும் ஏட்டிக்குப் போட்டியாக தமது இரும்புக்கரத்தை கொடூரமாக அவர்கள் மீது இறக்கியதேயொழிய தளர்த்தவில்லை.

பூர்வீகத் தமிழர்கள் தமது உரிமைப் போராட்டத்தைத் தொடங்கிய போது தாமும் சரியான வழியில் செயல்படவில்லை செயல்பட வழிகாட்டி இன்றித் தமிழ் மலையகத்தவர்கள் பற்றியும் ஆரம்ப காலத்தில் சிந்திக்கவில்லை. ஆயினும் காலம் தாழ்த்திய நிலையில் புரிய ஆரம்பித்துள்ளனர்.

வடக்கு, மலையகம் இணைந்த போராட்டங்கள் வலுவடைந்து வருகின்றன பல தியாகமிக்க போராட்டங்கள் மலையகத்தில் இடம் பெற்று வருகின்றன. கைது செய்யும் பொலீஸ் புறமுதுகுகாட்டி ஓடுகின்றது.

ஆம் அவ்வர்க்கம் தனது சக்தியை உணர்ந்துவிட்டது தொழிலாளர் பலம் பெற்றுவிட்டனர்.

அடிமை விலங்கை உடைத்தெறிய முனைந்து விட்டனர் மலையகத் தொழிலாளர்கள் இத்தனைக்கும் அவர்கள் ஆயுதம் யாது? மனத் துணிவும், வலிமையுமே!

அவர்களின் போராட்டம் வலிமை அடைவதைக் கண்ட சிங்கள இனவெறி அரசு தனது நிலைப்பாட்டில் சிறிது மாற்றத்தை ஏற்படுத்தியது.

சில முதலாளிகளால் தமது சொத்துக்களைப் பாதுகாக்கவென உருவாகிய தொழிற்சங்கங்களை அரசு கைக்குள் போட்டு பாமர மக்களுக்கு ஆசை வார்த்தைகளைக் கூறி தொழிலாளரை [illegible] தலைமையின் கீழ் ஒன்று திரட்டினர்.

தலைமைத்துவமும் தனது இயல்பைக்காட்டியது. அரசுடன் சமரசம் செய்து கொண்டனர். தொழிலாளரின் போர்க்குணத்திற்கும் எழுச்சிக்கும் இது தடைக்கல்லாக இருந்தது.

தொழிலாளர் உயிர்ப் பலி!

சிறிமா ஆட்சியில் சிவனுலக்சுமணனின் மரணத்தில் இருந்து இன்று வரை பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் தம்மின விடிவுக்காக உயிர் நீத்துள்ளார்கள். எனினும் போராட்டம் மென்மேலும் வளர்ச்சியுற்றதைத் தவிர சிதைவுறவில்லை. சிதைவுறப் போவதும் இல்லை.

தொழிலாளரின் எழுச்சி காரணமாக பல தடவை அரச ஆட்டம் கண்டபோதும் பிற்போக்குத்தனமான தொழிற்சங்க—அரசு சமரசம் காரணமாக தொழிலாளர்கள் தமது உரிமைகளைச் சரியான முறையில் வென்றெடுக்க முடியவில்லை.

தோட்டத் தொழிலாளரின் போராட்டங்களில் இருந்து வடக்கு, கிழக்குத் தமிழர்கள் பல உண்மைகளை உணர வேண்டியுள்ளது. வடக்கில் செயலிழந்து உறங்கும் தொழிற் சங்கங்களும் தொழிலாளரும் மலையகத்தை முன்னுதாரணமாகக் கொண்டு தேசியப் போராட்டத்துக்குப் பக்கபலமாக திகழலாம்.

இந்நாளை எமது மக்கள் விடுதலைக்கான பொன்னாளாக மாற்றிடுவோம்'

உழைக்கும் சகோதரர், தம் கரங்களை ஒன்றிணைந்து உயர்த்தாதவரை முதலாளிகளின் ஆதிக்கம் தொடர்ந்து கொண்டே இருக்கும். ஒரு வர்க்கப்புரட்சி வெடிக்கும், அடிமை விலங்கை உடைத்தெறிவோம். உரிமை வாழ்வைப் பெறுவோம் (இ-9)

சுதந்திர தமிழீழ தனி--

(1ம்-பக்கத் தொடர்ச்சி) இனப் படுகொலையை நடத்திக்கொண்டு சமாதானப் பேச்சு, அரசியல் தீர்வு என்ற போலி நாடகங்களையும் மேடையேற்றி வருகின்றது சிங்கள அரசு.

இந்தியாவையும் உலகத்தையும் ஏமாற்றுவதற்கான கபட நாடகமிது. கடந்த நான்கு ஆண்டுகளாக இழுபட்டு வரும் இந்த இராஜதந்திர செப்படி வித்தையையும் ஜெயவர்த்தனாவின் சூத்திரதார அரசியலையும் இந்திய அரசு இன்னமும் புரிந்து கொள்ளாதது எமக்குக் கவலையையும் வேதனையையும் தருகின்றது.

சமாதானப் பேச்சு என்ற பொறிக்கிடங்கில் புலிகளையும் அடக்கி எம்மை நிராயுதபாணிகளாக்கி நிர்மூலம் செய்வதே ஜெயவர்த்தனாவின் சதித்திட்டம்.

நாம் தெட்டத் தெளிவாக எமது மக்களுக்கு எடுத்துச்சொல்ல விரும்புவது என்னவென்றால் நாம் ஒருபோதும் ஜெயவர்த்தனாவின் சதி வலைக்குள் விழுந்து விடப் போவதில்லை என்பதுதான்.

பேச்சில் நம்பிக்கை வைக்காதீர்

சிங்கள முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தில் எமக்கு துளிகூட நம்பிக்கையில்லை. இந்தப் பாசிச இனவாத கும்பலுக்கு தமிழரின் பிரச்சினையைத் தீர்ப்பதில் எவ்வித ஆர்வமும் அக்கறையும் இல்லை. தமிழரை ஒழித்துக்கட்டி தமிழ்த் தாய்ப் பூமியை கபளீகரம் செய்வதுதான் சிங்கள ஆளும் வர்க்கத்தின் நோக்கம்.

ஆகவே, எனது அன்பார்ந்த மக்களே, சமாதானப் பேச்சுவார்த்தை அரசியல் தீர்வு என்று எழுப்பப்படும் சுலோகங்களில் எவ்வித நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புக்களையும் வைக்காதீர்கள். இந்த வார்த்தை ஜாலங்களில் எவ்வித அர்த்தங்களும் இல்லை.

நாம் எதிர்கொள்வது சாவையும் கண்ணீரையும் இரத்தத்தையுமே. நாம் எதிர்கொள்வது ஷெல்களையும் குண்டுகளையும் துப்பாக்கி ரவைகளையுமே. இவையே நாம் தினம் எதிர்கொள்ளும் பயங்கரமான யதார்த்தம்.

எனவே ராஜதந்திரம் மூலமோ, போலித்தனமான பேச்சுவார்த்தைகள் மூலமோ ஜெயவர்த்தனாவின் மாவட்டங்கள் மூலமோ எமது பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை.

நாம் போராடி நாம் இரத்தம் சிந்தி, நாம் எமது விடுதலையை வென்றெடுக்க வேண்டும். எமக்கு வேறு வழியே இல்லை. ஒன்று அடிமைகளாக அழிந்தொழிய வேண்டும்; அல்லது போராடிச் சுதந்திரமாக வாழ வேண்டும். இது தான் எமது அரசியல் தலைவிதி.

பிரதிக்ஞை

இன்று இந்தத் தொழிலாளர் புனிதத் தினத்தில் நாம் ஒரு பிரதிக்ஞை செய்து கொள்வோம். அதாவது சுதந்திர தமிழீழ தனி அரசுதான் எமது பிரச்சினைக்கு ஒரே தீர்வு, இறுதியான தீர்வு. இந்தத் தனி அரசை அமைக்க நாம் எமது உயிர், உடல், ஆன்மாவை அர்ப்பணித்துப் போராடுவோம். இது எமது மே தினப் பிரகடனமாக அமையட்டும்.

நாம் உருவாக்க இருக்கும் தமிழீழம் பாட்டாளி வர்க்கத்திற்கு சுபீட்சமளிக்கும் சமதர்ம சமுதாயமாக அமையும். நாம் தேசிய விடுதலைக்காக மட்டும் போராடவில்லை. தொழிலாள விவசாய வர்க்கங்களுக்கு பொருளாதார விடுதலையை அளிக்கும் சோசலிச சமுதாயத்தை கட்டி எழுப்பும் இலட்சியத்திற்காகவே நாம் போராடுகின்றோம்.

தமிழ் நாடு அரசும் தமிழ் நாட்டு மக்களும் இன்று பகிரங்கமாக எமது விடுதலை இயக்கத்திற்கு, விடுதலை இலட்சியத்திற்கு ஆதரவளிக்க முன்வந்திருப்பது எமது போராட்ட வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பம் என்றே நான் சொல்வேன். இதே போல இந்திய மத்திய அரசும், எமது மக்களின் சுதந்திரப் போராட்டத்தை ஆதரிக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

பலாலி...

(1ம் பக்கத் தொடர்ச்சி) நின்ற இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் [illegible]ப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த வீரசாமி ஜெயலட்சுமி (26 வயது) என்னும் ஐந்து பிள்ளைகளின் தாய் கையில் பலத்த காயமடைந்த தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் அபாயகரமான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-68)

யாழ்-ஆஸ்பத்- - -

(1-ம் பக்கத் தொடர்ச்சி) லலித் அத்துலத்முதலி செய்தியாளர் மத்தியில் தெரிவித்தார்.

யாழ் ஆஸ்பத்திரியை மூடிவிடும் திட்டம் அரசுக்கு உண்டா என்று கேட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு விளக்கமளித்தார். (உ-ள)

மேதின...

(1ம் பக்கத் தொடர்ச்சி) பெறும்.

தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகள் அரசியல் கட்சிகள் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் ஆகியவை இணைந்து நடத்தும் மே தின ஊர்வலம் இன்று காலை நல்லூர் இந்து விடுதிக்கு அருகில் இருந்து காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகும்.

நண்பகல் 11-30 மணிக்கு கொக்குவில் சந்தியில் ஊர்வலம் முடிவடையும். அங்கு மே தினக் கூட்டம் நடைபெற ஏற்பாடாயிருக்கிறது. (உ)

பிறந்தநாள் வாழ்த்து

செல்வன் வின்சன்

வேலணை யூட்போட்டோ உரிமையாளர் அன்ரனி, மெடோனா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் வின்சன் இன்று (01-05-87) தனது முதலாவது பிறந்தநாளை வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, ஆசை அண்ணா யூட் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும், அன்னை வேளாங்கண்ணியின் அருள் பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

02-05-87 சனிமுதல்
வழமையான நேர அட்டவணைப்படி வகுப்புகள் யாவும் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

NEW MASTER
INSTITUTE
B. M. C. LANE
JAFFNA
நாவலர் ரோட்,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி இரண்டாம் ஒழுங்கை 16 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தாரால் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 01-05-1987
Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 16, Second Lane, Power House Road, JAFFNA
Registered as a Newspaper at the General Post Office Under Number QJ / 94 / N/87 Telephone, 26805, 23078